


மெட்ரோ தெபெர்னேக்கள்

மீட்பு இயக்க கட்டுப்பாட்டு ஆணை (ஆர்.எம்.சி.ஓ) **RMCO** உணவு வங்கி விண்ணப்ப வழிகாட்டி
(14.10.2020இல் புதுபிக்கப்பட்டது)

(RMCO)ஆர்.எம்.சி.ஓ உணவு வங்கி திட்டத்தில் பங்கேற்க விண்ணப்பித்ததற்கு நன்றி. உங்கள் விண்ணப்பத்தை வெற்றிகரமாக சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து தகவல்களும் இருக்கிறபடியால் இந்த ஆவணத்தை கவனமாக மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

(RMCO)ஆர்.எம்.சி.ஓ உணவு வங்கி (ஆர்.எம்.சி.ஓ.எ.ஃ.ப்.பி) (RMCOFB)குறித்து

இவை சமீப காலத்தில் கோவிட் 19 தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவும்படிக்கு மெட்ரோ தெபெர்னேக்கள் திருசபையினால் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். மீட்பு இயக்க கட்டுப்பாட்டு ஆணை (ஆர்.எம்.சி.ஓ) (RMCO) காலத்தில் இவை அக்டோபர் முதல் டிசம்பர் 2020 வரை மாத்திரமே இயங்கும். தொற்றுநோயினிமித்தமாக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள மற்றும் உணவுதவி தேவைப்படும் தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கு 3 மாதங்களுக்கு மாத்திரமே உணவு பொருட்கள் வழங்கப்படும்.

(RMCOFB) ஆர்.எம்.சி.ஓ.எ.ஃ.ப்.பி பங்கேற்பு
(RMCOFB) ஆர்.எம்.சி.ஓ.எ.ஃ.ப்.பி பங்கேற்பது என்பது மெட்ரோ தெபெர்னேக்கள் திருசபையின் அங்கத்தினர்களுக்கும், மெட்ரோ தெபெர்னேக்கள் திருசபையின் அங்கத்தினர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் மாத்திரமே திறந்திருக்கும்.

(RMCOFB) ஆர்.எம்.சி.ஓ.எ.ஃ.ப்.பி க்கான விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்
ஒரு ‘விண்ணப்பதாரர்’ என்பது மெட்ரோ தெபெர்னேக்கள் அங்கத்தினராக உள்ள நபரை குறிக்கிறது, தனக்காகவோ அல்லது குடும்ப அங்கத்தினர் அல்லது நண்பரின் சார்பாகவோ, அவர்தாம் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்கிறவராக இருக்கிறார். அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் பெயர்கள் திருசபையின் தரவுதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்த சமீப காலத்தில் திருசபை ஜனங்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும். நவம்பர் 2018க்கு பிறகு மெட்ரோ குடும்பத்தில் சேர்ந்து புதிய திருசபை கணக்கெடுப்பை பூர்த்தி செய்யாத புதிய உறுப்பினர்கள் விண்ணப்பத்தை சமர்பிக்கிறதற்கு முன்பு சபை ஆன்லைன் திருசபை கணக்கெடுப்பை (இணைப்பு- https://bit.ly/2EGvD02) பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால், திருசபையின் தரவுத்தளத்தில் உறுப்பினரின் பெயரை அடையாளம் காண முடியாவிட்டால் விண்ணப்பம் தானாக நிராகரிக்கப்படலாம்.

உணவு உதவி பெறுபவருக்கான தேர்வு செய்யும் அளவுகோல்கள்
ஒரு’பெறுநர்’ என்பவர் பின்வரும் தேர்வு அளவுகோல்களில் குறைந்தபட்சம் ஒன்றை பூர்த்தி செய்யும் நபராக அல்லது குடும்பத்தை குறிக்கிறது மட்டுமின்றி மெட்ரோ திருசபையின் அங்கத்தினராக இருக்கலாம் அல்லது இல்லாமலுமிருக்கலாம், அவர்கள் உணவு உதவியைப பெறுவார்கள்.

a. MCO வின்போது வேலையை இழந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் அதோடுகூட MCO வுக்கு முன்பு மாதத்திற்கு RM 4000க்கும் குறைவான வீட்டு வருமானம் கொண்டவர்கள்,
b. MCO வின்போது வேலையை இழந்த தனிநபர், MCO வுக்கு முன்பு மாதத்திற்கு RM 2000க்கும் குறைவான வீட்டு வருமானம் கொண்டவர்கள்,
c. தங்கள் பிள்ளைகளுடைய ஆதரவு இல்லாமலிருக்கும் 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது சென்ற முதியவர்கள்
d. MCO வின் நிமித்தமாக வருமான வாழ்வாதாரத்தை அல்லது உதவியை இழந்த உடல் குறைபாடுள்ளவர்கள் (OKU)

சபை அங்கத்தினர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அல்லது தேர்வு நிபந்தனைகளை நிறைவு செய்யும் நண்பர்களுக்கு மாத்திரமே இந்த விண்ணப்பம் திறந்திருக்கும். போதுமான இடங்கள் இருப்பதன் காரணமாக, தேர்வு அளவுகோல்களை நிறைவு செய்வது ஒரு விண்ணப்பத்தின் ஒப்புக்கொள்ளுதலுக்கு உத்தரவாதம் அளிக்காது, காரணம் மிக பெரிய தேவைகளை கொண்ட குடும்பங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மற்ற அனைத்து விண்ணப்பமும் காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டு, இடங்கள் கிடைக்கும்போது ஒரு மாதத்திலிருந்து மாத அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படும். ஒரு பெறுநரின் நிதி நிலைமை மேம்பட்டவுடன் பெறுநர் பட்டியலிலிருந்து வெளியேற்றப்படுவார், மேலும் அதிகமாய் தேவைப்படும் மற்றவர்களுக்கு இந்த இடம் கிடைக்கும்.

விண்ணப்பத்தின் சரிபார்ப்பு மற்றும் ஒப்புதல்

நாங்கள் கொண்டாடும் அளவு போதுமானதாகவும், சிறிதளவாகிலும் அக்கறையுள்ளவர்களாக இருக்க விரும்புகிறோம். குறிப்பாக இது போன்ற கடினமான காலங்களில் யாரும் தனியாக நிற்கக்கூடாது என்று நாங்கள் நினைக்கிறோம். ஆகையால், மெட்ரோ தெபெர்னேக்களின் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு வீட்டுக்கூட்ட குழுவின் ஒரு பகுதியாக இருக்கும்படி நாங்கள் உறுதியாக ஊக்குவிக்கிறோம். மேலும் உங்கள் வீட்டுக்கூட்ட தலைவர் அல்லது போதகருக்கு பெறுநரின் குடும்ப நிலைமையை குறித்து தெரிவிக்க வேண்டும் காரணம் அவர்கள் உங்களுடனும் உங்கள் குடும்பத்துடனும் இணைந்து செயல்பட முடியும்.

தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள், அதாவது எங்கள் தேர்வு குழுவினர் சரிப்பார்ப்பிற்காக அல்லது விண்ணப்பத்தை அங்கீகரிப்பதற்கு முன்பு அவர்களுக்கு கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டால் உங்கள் வீட்டுக்கூட்ட தலைவர் அல்லது போதகரிடம் தொடர்புக் கொள்ளலாம். நீங்கள் திருசபைக்கு புதியவராக இருந்தால் அல்லது சில காலமாக மெட்ரோ ஆராதனைகளில் கலந்துக் கொண்டிருந்தாலும், இன்னும் எந்த வீட்டுக்கூட்டத்திலும் அல்லது போதகருடனும் இணைக்கப்படாமலிருந்தால், தயவு செய்து ஆராதனைக்கு பிறகு இணைப்பு மையத்தை (onsite) பார்வையிடவும் அல்லது ஜூம் விருந்தினர் வரவேற்பு அறை (online), அங்கு ஒரு போதகர் அல்லது திருசபை ஊழியர்கள் உதவ இருப்பார்கள்.

விசாரணைகள் மற்றும் சரிசெய்தல்

தொலைபேசி அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் மூலம் எந்தவொரு விசாரணைகள், முறையீடுகள் அல்லது பயன்பாடுகளை (RMCOFB) ஆர்.எம்.சி.ஓ.எ.ப்.பி குழுவால் மகிழ்விக்க முடியவில்லை என்று வருந்துகிறோம். ஆன்லைன் விண்ணப்ப படிவம் (இணைப்பு –https://form.gle/gz1iK8PPzDym4Gb9)வழியாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே கருதப்படும். எந்தவொரு விண்ணப்பதாரருடனும் தேர்வு குழு நேரடியாக தொடர்பு கொள்ளவதற்கு அவ்வாறு செய்யாது, மாறாக அவ்வபோது இடங்கள் கிடைக்கும்போது உங்கள் விண்ணப்பத்தை உங்கள் வீட்டுக்கூட்ட தலைவர் அல்லது போதகர் மூலம் மதிப்பாய்வு செய்வார்கள். ஒரு விண்ணப்பத்தின் ஒப்புதலுக்கு பிறகு, விண்ணப்பதாரர் உணவு உதவியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதற்கான வழிமுறைகளுடன் ஒரு மின்னஞ்சலைப் பெறுவார்கள். அனைத்து விண்ணப்பதாரர்களும் திருசபை வளாகத்திலிருருந்து (முதியவர்கள் மற்றும் உடல்நல குறைபாடு ஓ.கே.யூ {OKU} தவிர) உணவு உதவிகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். விண்ணப்பச் செயல்பாட்டின்போது நீங்கள் தொடர்ச்சியான பிரச்சனைகளைச் சந்திக்க நேரிட்டாலோ அல்லது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளில் பதில் கிடைக்கவில்லையென்றால், நீங்கள் இணைப்பு மையம் (Connect Centre) அல்லது விருந்தினர் வரவேற்பு அறைக்குச் (Zoom Guest Reception room) செல்லலாம் அல்லது உங்கள் வீட்டுக்கூட்ட தலைவர் / போதகரிடம் பேசலாம், மேலும் உங்களுக்கு உதவும்படிக்கு அவர்கள் உங்களை சரியான (RMCOFB) ஆர்.எம்.சி.ஓ.க.ப்.பி குழு பணியாளர்களிடம் வழிநடத்த முடியும்.

தங்கள் பங்கேற்புக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக